**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.466/2021**

**தேதி : 05.11.2024**

**(பி.வா.சா.3 ) – திரு. பழனிநாதன்**

**சாட்சி அழைக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை : (வாதிகள் தரப்பில்)**

1. எனது பக்கத்து வீட்டுக்காரர்களுக்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன். அவர்கள் பெயர் எனக்கு ஞாபகம் வரவில்லை. அவர்களை குமார் என அழைப்பேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான்தான் கூறினேன். நான் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் பிறந்தது முதல் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில்தான் வசித்து வருகிறேன். நான் குடியிருப்பது மங்கள கவுண்டர் சந்தா என்றால் நான் குடியிருப்பது நடுத்தெரு. எனது பிரமாண வாக்குமூலத்தில் மங்கள கவுண்டர் சந்தில் குடியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த முகவரியில் என் மகன் குடியிருந்தார். இடையில் கொஞ்சநாள் நான் அங்கு குடியிருந்தேன்.

2. நான் தற்போது குடியிருக்கும் முகவரி என்னவென்றால் கதவு எண்.58, நடுத்தெரு. இந்த முகவரியில் நான் எத்தனை ஆண்டுகளாக குடியிருக்கிறேன் என்றால் 15 ஆண்டுகளாக குடியிருக்கிறேன். மங்களகவுண்டர் சந்தில் உள்ள வீடு எனது பூர்வீக வீடு. நான் பிறந்தது முதல் நடுத்தெருவில் உள்ள வீட்டில்தான் வசித்து வந்தேன். பிரதிவாதி மற்றும் அவரது பூர்வீகம் பற்றி எனக்கு தெரியும். வாதி மற்றும் அவரது பெற்றோர், பூர்வீகம் பற்றியும் எனக்கு தெரியும்.

3. வாதிகளின் பெயர் எனக்கு தெரியாது. வாதிகளின் தந்தை பெயர் அப்பாவு. பழனிக்குமாரின் தகப்பனார் பெயர் ரத்தினசபாபதி. 2016 ம் ஆண்டு பிரதிவாதிக்கு சொத்து வந்தது மட்டும் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

பிரதிவாதி எந்த வருடம் வீடு கட்டினார் என்றால் வீடு கட்டவில்லை. பழைய வீடு அப்படியே உள்ளது. அது புதுப்பிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகளுக்கும் வாதிகளுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியும். எத்தனை ஆண்டுகளாக பிரச்சனை என்று தெரியுமா என்றால் 3,4 ஆண்டுகளாக பிரச்சனை உள்ளது.

4. வழக்கு சம்பந்தமாக எனக்கு எப்போது தெரியவந்தது என்றால், போலீசார் விசாரணைக்கு வந்தபிறகு தெரியும். வாதிகள் காவல்நிலையத்தில் பிரதிவாதிகள் மீது வழக்கு பதிவு செய்த விபரம் எனக்கு தெரியும். பிறந்தது முதல் அப்பகுதியில் குடியிருப்பதால் எனக்கு அமராவதியம்மாள், அங்கம்மாள் ஆகியோர்களை தெரியும். அமராவதியம்மாள் ரத்தினசபாபதியின் தாயார். அங்கம்மாள் பிரதிவாதியின் உறவினர். குழிவேல் முதலியார் என்பவரையும் எனக்கு தெரியும். குழிவேல் முதலியார் பிரதிவாதியின் தாத்தா.

5. எனக்கு வழக்கு பற்றி தற்போதுதான் தெரியும் என்றும், வழக்கு பற்றிய விபரங்களும், வழக்கு பற்றிய விபரங்களும் சரியாகத்தெரியாமல் நான் தவறாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. அதனால்தான் எனக்கு வாதிகள் மூவரின் பெயரும், பிரதிவாதியின் பாட்டியின் பெயரும் தெரியவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அவரது அப்பா கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் தவிர வேறு எந்த விபரமும் எனக்கு தெரியவில்லை என்றால், அதற்கு முன்பாக கூட்டுக்குடும்பமாக இருந்தார்கள்.

6. வழக்குச்சொத்தில் கழிவறை கிழக்கில் தெற்குப்பார்த்தாற்போல் மூலையில் உள்ளது. அந்த கழிவறையை இருதரப்பினரும் கூட்டாக பயன்படுத்தி வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஆரம்பத்தில் அது எடுப்பு கழிவறையாக இருந்தது. சட்டம் வந்த பிறகு அந்த கழிவறை மூடப்பட்டுவிட்டது. சுமார் 25 வருடங்களுக்குமேலாக அந்த சட்டம் வந்தது. தற்போது மேற்படி கழிவறை இந்தியன் டாய்லட்டாக உள்ளது என்றால் நான் சண்டை வந்தபிறகு பார்த்தேன். அது பழைய சாமான்கள் போட்டு வைக்கப்பட்டுள்ளது.

7. நீதிமன்றத்திலிருந்து ஆணையர் மற்றும் சர்வேயர் வந்த விபரம் எனக்கு தெரியும். அப்போது நான் உடனிருந்தேன். ஆணையர் மற்றும் சர்வேயர் வந்து பார்த்தபோதும் அதில் பழைய சாமான்கள் போட்டு வைக்கப்பட்டிருந்ததா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையரின் அறிக்கையுடன் உள்ள புகைப்படத்தில் அவ்வாறு பழைய சாமான்கள் போட்டு வைக்கப்படவில்லை என்றால் சரிதான். அதில் சேதப்படுத்தப்பட்ட கழிவறைதான் உள்ளது என்றால் மேல் ஓடு உடைக்கப்பட்டுள்ளது.

8. கழிவறை என்பது அன்றாட பயன்பாட்டில் இருப்பது என்றால் சரிதான். அதை பயன்படுத்தியதால்தான் பிரச்சனை ஏற்பட்டது. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளின் வீட்டில் குலதெய்வ வழிபாடு நடப்பதால் அங்கு கழிவறை கட்டவில்லை என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். முன்பாகஸ்தர்களின் பத்திரத்தில் கழிவறையை பயன்படுத்துவதை தடுக்கக்கூடாது என வாசகங்கள் இருப்பதாகச் சொன்னால் எனக்கு தெரியாது.

9. முன்பாகஸ்தர்கள் பேசி கழிவறையை பயன்படுத்த வேண்டாம் என முடிவானதாக சொல்வதற்கு ஆவணம் இல்லை என்றால் அது வாய்மொழியாக பேசப்பட்டதுதான். பிரதிவாதியின் தகப்பனார் காலத்தில் அவ்வாறு பைசல் பேசப்பட்டது. பைசல் பேசப்பட்ட வருடம் எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதி மராமத்து செய்து கழிவறை கட்டியதாகச் சொல்வது எப்போது என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது. நான் 70 வருடமாக அப்பகுதியில் குடியிருக்கவில்லை என்றும், சமீபமாக 4 ஆண்டுகளாக நடுத்தெருவில் நான் குடியிருந்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் 15 வருடமாக அங்கு குடியிருந்து வருகிறேன்.

10. நான் தியாகி கோபால் என்பவரின் வீட்டில் குடியிருந்து வருகிறேன். பிரதிவாதி சொல்லித்தான் எனக்கு மேற்படி விபரங்கள் தெரியும் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :–</u>** இல்லை.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.11.05 20:12:33 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.